கண் வைத்திய நிபுணர்களின் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்

★ ★ ★

எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed

★ ★ ★

580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

சுடர் 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01-10-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 301

# கிழக்குத் தாக்குதலில் 11 படையினர் மரணம்!

## ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

கொழும்பு, அக்டோபர் 1

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லையில் நேற்றுக் காலை 6 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்காப் படையினர் 11 பேர் உயிரிழந்தனர். அவர்களின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மட்டக்களப்பு மாவட்டம் 13 ஆம் கொலனியிலிருந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள "சென்ரல் காம்ப்" முகாமுக்கு ரோந்து சென்ற படையினர் மீதே விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர் என்று பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாறை மாவட்டம் 13ஆம் சிங்களக் குடியேற்றக் கிராமத்தில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது சுமார் 20 விடுதலைப் புலிகளைக் கொண்ட தாக்குதல் அணி கிரனேட் மற்றும் துப்பாக்கிகளைக் கொண்டு தாக்கியது என்றும் —

சம்பவத்தின் போது அந்த இடத்தில் ஒன்பது படையினரும் பின்னர் ஆஸ்பத்திரியில் இரு படையினரும் உயிரிழந்தனர் என்றும்—பி. பி. ஸி. அறிவித்தது.

ஆனால் அம்பாறை மாவட்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### உடனடியாக ஊரடங்கு உத்தரவு

விடுதலைப் புலிகள் நேற்று கிழக்கில் நடத்திய தாக்குதலை அடுத்து உடனடியாக அம்பாறை மாவட்டம் திகலபத்து வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதிகளுக்கு மேலதிக துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதாகவும், அங்கு தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (கூ-எ-8)

## அம்பாறைக் காட்டில் வீமானத் தாக்குதல்கள்!

லண்டன், அக். 1

அம்பாறை மாவட்டத்தைச் சூழவுள்ள காட்டுப் பகுதியில் கடும் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வார இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட விமானத் தாக்குதல்கள்—

விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய திடீர் தாக்குதலில் 11 படையினர் உயிரிழந்ததை அடுத்து தீவிரமாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறைக் காட்டின் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-8]

## திருமலைத் தாக்குதலில் கவச வாகனம் சிதறியது!

யாழ்ப்பாணம், அக். 1

திருகோணமலை மாவட்டம் பாலம்போட்டாறுப் பகுதியில் கடற்படையினரின் வாகன அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று நண்பகல் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் கிக்கி படையினரின் பவள் கவச வாகனம் சிதறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடலோர கடற்படை முகாமில் இருந்து 20 வாகனங்களில் புறப்பட்டு ரோந்து சென்ற சுமார் 150 கடற்படையினர் பாலம்போட்டாறுப் பகுதியில் வைத்து கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்பட்டது.

படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (உ-3)

## அகதி முகாம்கள் மீது ஜேர்மனியிலும் தாக்குதல்

ஜேர்மனியில் வெளிநாட்டு அகதிகள் வசிக்கும் முகாம்கள் மீது அங்குள்ள தீவிரவாதிகள் குழு நடத்தி வரும் தாக்குதல் இரண்டாவது வாரமாகத் தொடர்ந்து நீடிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன:

பெற்றோல் குண்டுகள் மற்றும் தீப்பந்தங்களைக் கொண்டு தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## வடமராட்சியில் பீரங்கித் தாக்கு!

யாழ்ப்பாணம், அக். 1

வடமராட்சிக் கடற்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வளிக்காடு, வல்வெட்டித்துறை பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை நோக்கி கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அரைமணி நேரம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் பொதுமக்களின் உடைமைகள் சேதமடைந்தன.

இதேவேளை சனிக்கிழமையும் இந்தப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். [உ-3]

## பொன்னாலையில் வீடுகள் சேதம்

சுழிபுரம், அக். 1

கடந்த ஞாயிறு நள்ளிரவு காரைநகரிலிருந்து ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் பொன்னாலை குடியேற்றப் பகுதியில் விழுந்து வெடித்தன. இதனால் அப்பகுதி வீடுகள் பல சேதமடைந்தன.

இரவு வேளையில் அப்பகுதி மக்கள் பாதுகாப்புக்காக இடம் பெயர்ந்திருந்ததால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

நள்ளிரவுக்குப் பின்னர் காரைநகர், பொன்னாலை, திருவடிநிலை கடற்பகுதியில் பீரங்கிக் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. [உ-28]

### முச்சந்தி முரளி



ஸ்ரீலங்கா அரசமைப்பின்ரை சித்துவம் அது......!

## அரசமைப்பைப் படித்ததால் மாணவனுக்குப் பைத்தியம் பிடித்தது!

கொழும்பு, அக். 1

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணையால் மாணவன் ஒருவனுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது!

காலி மாவட்டத்திலுள்ள கராபிட்டிய மருத்துவமனையில் இந்த மாணவன் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

குற்ற விசாரணைப் பிரேரணை பற்றிய செய்திகள் வெளியானதும், அதனை மேலும் விளங்கிக் கொள்வதற்காக இந்த மாணவன் அரசமைப்புச் சட்டத்தைப் படித்து புரிந்து கொள்ள முயற்சித்தானாம்.

அத்தோடு இது தொடர்பான வானொலிச் செய்திகள் மற்றும் பத்திரிகைச் செய்திகளை அறிந்து கொள்வதிலும் அந்த மாணவன் அதிக ஈடுபாடு காட்டினானாம்.

அதன் விளைவாக மனோநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பிரஸ்தாப மாணவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். தற்போது அவன் அரசமைப்பு பற்றிய சரத்துக்களைப் புலம்பிக் கொண்டிருக்கிறான். [உ-10]

### எம். பிக்களின் ஒப்பங்கள்:

## நிபுணர்களின் உதவியை சபாநாயகர் நாடுவார்

கொழும்பு, அக். 1

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையில் உள்ள கையொப்பங்களின் செல்லுபடியாகும் தன்மை பற்றி ஆராயும் போது, சபாநாயகர் கையொப்ப ஆய்வு நிபுணர்களின் உதவியை நாடக்கூடும் என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்ததாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி நிபுணர்களின் ஆலோசனை திருப்தி அளிக்காத பட்சத்தில், கையொப்பமிட்டதாகக் கூறப்படும் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை சபாநாயகர் தனிப்பட அழைத்து விசாரிப்பார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கலாமா இல்லையா என்பது பற்றிய

[2 ஆம் பக்கம் பார்க்க]

## மனித உரிமைகள் குழு மட்டக்களப்பு செல்லும்

கொழும்பு, அக். 1

ஜெனிவாவை தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் நிலையத்தின் ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி இலங்கைக்கு வரவிருக்கிறது. இக்குழுவினர் மட்டக்களப்புக்கு 11 ஆம், 12 ஆம் திகதிகளில் விஜயம் செய்வர் என்று அறிவிக்கப்படுகிறது.

சாந்தமறை, அம்பாந்தோட்டை, கண்டி ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யும் இந்தக் குழு அரச அதிகாரிகளுடனும், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறது.

## சவப்பெட்டியுடன் உண்ணாவிரதம்: மாத்தறையில் 5 இளைஞர்கள் கைது

மாத்தறை அரச மரத்தடியில் சவப் பெட்டியுடன் உண்ணாவிரதம் இருந்த ஐந்து இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்ற விசாரணை மனுவை ஆட்சேபித்தே இவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

திஸ்ஸவையில் இருந்து 25 மைல் தூரம் சவப்பெட்டியுடன் பாத யாத்திரை செய்து மாத்தறையை வந்தடைந்த இவர்கள் அங்கு உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## தினமும் 20 லொறிகள் வடக்கே வர அனுமதி

### தாமதத்தைத் தவிர்க்க கருவியால் சோதனை

யாழ்ப்பாணம், அக். 1

இப்போது கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு வடக்கே தினமும் 20 லொறிகள் வருவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்குகின்றனர்.

இதுவரை காலமும் கொழும்பில் இருந்து அத்தியாவசிய பொருள்களுடன் வரும் லொறிகளில் பத்து மட்டுமே வவுனியாவைத் தாண்டி வருவதற்கு அனுமதிக்கப்பட்டன.

அரிசி, மா, சீனியுடன் வரும் லொறிகள் விரைவாகச் சோதனையிடப்பட்டு இப்பால் வர அனுமதிக்கப்படுகின்றன. உணவுப் பொருள்களுடன் வரும் லொறிகளை விரைவில் சோதனை செய்து தாமதம் செய்யாமல் அனுப்புவதற்காக "மெற்றல் டிக்ரெக்டர்" கருவியை இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர்.

உணவுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களுடன் வரும் லொறிகள் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனவாம். (அ-3)

## தமிழக மீனவர்கள் 21 பேரும் விரைவில் தாயகம் செல்வர்

### செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்பாடு

விடுதலைப் புலிகளினால் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் 21 தமிழக மீனவர்களும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் விரைவில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரியவருகிறது.

கடந்த 19 ஆம் திகதி பாக்குநீரிணைக் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த 24 இந்திய மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் பிடித்துத் தாக்கி, கடலில் தூக்கி வீசினர் என்பதும்—

பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் நீந்திக் கரை சேர்ந்த 21 மீனவர்களை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்று, பாதுகாப்பாகத் தங்கவைத்து, உபசரித்து வருவதும் தெரிந்தவையே.

இந்த மீனவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கூட்டிச் செல்வதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கப்பல் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவிருக்கிறது.

செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து இந்திய மீனவர்கள் 21 பேரையும் பொறுப்பேற்று, கொழும்பில் வைத்து இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைப்பர்.

மீனவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஸ்ரீலங்கா அரசு இணங்கியுள்ளது. (உ-எ)

## ஆனையிறவு யுத்தத்தின் பின் புலிகளுக்கு ஆதரவு அதிகரிப்பு

### 'ரைம்' சஞ்சிகை தகவல்

கொழும்பு, அக். 1

ஆனையிறவு யுத்தத்தின் பின்னர், குடாநாட்டு மக்களிடையே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு பெருகியுள்ளது.

இப்படி 'ரைம்' சஞ்சிகை தனது செப்டம்பர் 16 ஆம் திகதி இதழில் தெரிவித்துள்ளது.

ஆனையிறவு யுத்தத்தில் புலிகள் எதிர்பார்த்த வெற்றியை அடையாவிட்டாலும் கூட, தமிழ் மக்களுக்கும், முற்றிலும் சிங்களவர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையே தலைப் புலிகள்தான் தடுப்பாகி நின்றனர் என்று தமிழ் மக்கள் நம்புகின்றனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவு யுத்தம் பற்றி பிரிகேடியர் விஜய விமலரட்ண 'ரைம்' சஞ்சிகைக்கு கருத்துத் தெரிவிக்கையில், தட்டைக்காட்டில் படையினர் தரையிறக்கப்பட்டபோது, படையினரைத் தாக்க விடுதலைப் புலி வீரர்கள் ஆவலாக இருந்தனர் என்றார்.

ஆனையிறவு யுத்தத்தின் மூலம் இராணுவத்தினர் பாடம் படித்துள்ளனர். முல்லைத்தீவிலும் நாங்கள் மிகவும் அபாயகரமான இராணுவ நடவடிக்கையிலேயே (High Risk Operation) ஈடுபட்டோம்- என்று இராணுவத் தளபதி திரு. ஹமில்டன் வனசிங்க தெரிவித்ததாக மேலும் 'ரைம்' சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

யாழ். நகரில் உள்ள ஸ்தாபனம் ஒன்றிற்கு தமிழ், ஆங்கில பெண் தட்டெழுத்தாளர் (ரைப்பிஸ்ட்) தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. 7 - 10 - 91 இற்கு முன் விண்ணப்பிக்கவும். இல 819, C/O உதயன். (4317)

### மணமகன் தேவை

யாழ். இந்து. சைவ போசன, A/L படித்த, அழகிய மணமகளுக்கு 29 வயதிற்கு மேற்பட்ட படித்த, அழகிய மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது. இல 820, C/O உதயன். [4330]

### புதிய மீரா நாவல்கள்

பரிசளிக்கக் கூடியவை, இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன் அக்கினி, முள்முடி மன்னர்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை. சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை' இன்னும் உயிரோட்டமான பல 'மீரா நாவல்கள்' விற்பனையாகின்றன (4302)

### கைமாறிவிட்டது

26 - 9 - 91 இரவு நல்லூரில் விடப்பட்டிருந்த எனது றலி 02 SL 5034 இலக்க சைக்கிளை எவரோ தவறுதலாக தமது DE 3148 இலக்க சைக்கிளுக்கு பதிலாக எடுத்துச் சென்று விட்டனர். தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் மகா விஷ்ணு, தம்பா வீதி, சுழிபுரம் என்னும் எமது விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (18285)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

9 - 9 - 91 அன்று இரவு சேரதீவு இறங்குதுறையில சங்கிலியுடன் தாலியொன்று பின்வரும் மூலவரியில் வசிக்கும் திருகோணமலையைச் சேர்ந்தவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் பெற்றுக் கொள்ளவும். 31 - 10 - 1991 இன் பின்னர் சங்கிலியும், தாலியும் ஏழாலை வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் ஒப்படைக்கப்படும். எஸ். பூபாலபிள்ளை, மே/பா பத்மநாதன், 22, புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி (18284)

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். 'சக்தி சரவணா' 310 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி காலை 9-00 மணி தொடக்கம் 3-30 மணி வரை சந்திக்கலாம் வியாழன் விடுமுறை [4314]

### ரைப்ரைட்டர்

Typewriters தொடக்க இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும். பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் (சி/0533)

### திருமண சேவை

லண்டன் கனடா, ஜேர்மனி பிரான்ஸ் நாட்டு குடியுரிமை பெற்ற மணமகன்களுக்கு தகுந்த மணமகள் தேவை. தொடர்பு: குருவிளங்கம், 16/16, ளன்புரம் கொழும்புத்துறை (18282)

---


யாழ்/ பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி

★ பட்டப் படிப்பு ★

G. A. Q மாலை நேர விரிவுரைகள்

[திங்கள் முதல் வெள்ளி வரை]

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன!

அடுத்த வகுப்பு 02-10-1991 புதன்கிழமை

நிர்வாகி,
தொடர் கல்வி நிலையம்,
உடுவில் மகளிர் கல்லூரி,
சுன்னாகம்.

[சி-0598]


---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 — 04 — 1920 | 02 — 09 — 1991 |

நயினை

### திருமதி சவுந்தரம் சின்னத்தம்பி

எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் 02 - 10 - 91 புதன்கிழமை காலை நயினாதீவில் நடைபெறவுள்ளன. அதில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. [17945]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 928 — 08 18 | 1991 — 09 — 01 |

திருமதி

### லூர்து திரேசா பொன்னுத்துரை

எங்கள் அன்புத் தாயே!

எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தாயே! எங்கள் இதயத்தில் என்றும் தங்கள் இன்முகம் நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

3 ஆம் வட்டாரம்,
அலைலப்பிட்டி. [17944]

---

விடுதலைப் புலிகளுக்கு

# ஆயுதங்கள் வழங்கியதை ஒப்புக்கொண்டார் ரணில்!

கொழும்பு, அக். 1

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்களை வழங்கியது உண்மையே.

— இப்படி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆளும் ஐ. தே. க. உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சிங்களத் தீவிரவாதிகளின் கிளர்ச்சி நடவடிக்கைகளை ஒடுக்கவும் —

சிங்களவர் மற்றும் தமிழர்களுக்கு இடையே பின்விளைவான மோதல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பைத் தடுக்கவும் இது செய்யப்பட்டதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார் என்று இந்திய வானொலி மேலும் கூறியது. [உ-எ]

## கண்காட்சி

யாழ்ப்பாணம், அக். 1

உலக ஆசிரிய தின வாரத்தை முன்னிட்டு யாழ். ஆரம்ப பாடசாலையில் இன்று 'நாளையும் மாணவர்களின் சித்திரக் கண்காட்சியும், ஆசிரியர்களின் கட்புல, செவிப்புல சாதனக் கண்காட்சியும் இடம் பெறவிருக்கின்றன.

இந்நிகழ்ச்சிகளை யாழ் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் இன்று காலை 9 00 மணிக்கு ஆரம்பித்து வைப்பார். [உ]

## கிழக்குத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் ரோந்து சென்ற படையினரின் வாகனம் விகளின் நிலக் கண்ணி வெடியில் சிக்கிச் சிதறியதில் 11 படையினர் உயிரிழந்தனர் என்று வெரிதாஸ் வானொலி தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் 13 ஆம் கிராம இராணுவ முகாமிலிருந்து வெளியேறி ரோந்து சென்ற படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின் போது படையினரிடமிருந்து ரி56-2 ரகத் துப்பாக்கிகள் — 6, ரி56 ரகத் துப்பாக்கிகள் — 2, அவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 9 என்பன தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். [உ-எ-3]

## நிபுணர்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது தீர்ப்பை 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது விசேட அறிவிப்பாக சபாநாயகர் வெளியிடலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் திகதியை முடிவு செய்வதற்காக சபாநாயகர் அன்றைய தினமே நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை முதலில் கூட்டுவாரென்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)

---

வேலணை

### சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்

### உலக ஆசிரியர் தின விழா

02 - 10 - 1991 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் மேற்படி விழாவில கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்திச் சபை அங்கத்தவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— அதிபர், ஆசிரியர்கள்.

[18281]

---

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை.

### வெளி நிலைப் பட்டப்படிப்பு

### பதிவு நீடித்தல் - 1990/91

(வர்த்தக முதற் தேர்வு / கலை முதற் தேவு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1990 / 91 கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வு நடிகளாக வர்த்தக முதற் தேர்வு / கலை முதற் தேர்வுக்குப் பதிவு காலம் 30 - 09 - 1991 இல் இருந்து 12 - 10 - 1991 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. [சி 0603]

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவரட்ணம் வேல்முருகு

திருமதி சிவரட்ணம் வேல்முருகு 29-09-1991இல் காலமானார். அன்னார் திரு. கே. எஸ். வேல்முருகு [இளைப்பாறிய உள்நாட்டு வியாபார ஆணையாளர், யாழ். கச்சேரி] அவர்களின் அன்பு மனைவியும், செல்வி சந்திரமதி (செல்வா), திருமதி பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. நடராசாவின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புதன்கிழமை [02-10-1991] பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கே. எஸ். வேல்முருகு

வளாகச் சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி. [18288]

### திருமதி றோஸ் அருளானந்தம்

[ஆசிரியை, சென். டொன் பொஸ்கோ மகா வித்தியாலயம்]

திருமதி றோஸ் அருளானந்தம் 20 - 09 - 1991 இல் நீர்கொழும்பில் காலமானார் இவர் திருவாளர் அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், மேறியன், நிர்மலா, Dr. பேணடா, Dr. மைக்கல், அமலா, சாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ரன் தம்பிராசா, செபஸ்ரியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr வேதநாயகம், Dr. பரமானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், யாழ். மறை மாவட்ட முதல்வர் பிதா மைக்கல்சாமி அடிகளார், திருமதி ராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிப் பூசை 22 - 09 - 1991 நீர்கொழும்பில் வண. பிதா மைக்கல்சாமி அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது. நீர்கொழும்பு சீஸ் ஸ்ரீட், சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

காலஞ்சென்ற திருமதி றோஸ் அருளானந்தம் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றுப் பூசை 1991 அக்டோபர் 4 ஆம் திகதி [வெள்ளிக்கிழமை] யாழ். அருள்ஆச்சிரமத்தில் (5, கோவில் வீதி) மாலை 5-30 மணிக்கு வண. பிதா மைக்கல்சாமி அ. ம. தி. அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
வண. பிதா மைக்கல்சாமி அ ம.தி.

[18286]

### Dr. T. கோபாலசிங்கம்

கல்வளை, சண்டிலிப்பாயைச் சேர்ந்த Dr. T. கோபாலசிங்கம் J. P. கொழும்பில் 27 - 09 - 91 இல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற சிவபாக்கியவதியின் அன்புக் கணவரும், வசந்தகுமாரி, தயாவதனி, சிவலோசனி, Dr. சிறிதரன், பிரபாகரன் ஆகியோரின் தந்தையாரும், குணரத்தினம், மானோகரன், வத்சலகுமாரி, வசந்தா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற வ. தம்பிராசா, பொன்னம்மா ஆகியோரின் மகனும், Dr P. செல்லையா, மனோன்மணி அம்மாள் ஆகியோரின் மருமகனும், மார்க்கண்டேயர், திருமதி புஷ்பவதி - அருளானந்தம், இராமகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30 - 09 - 91 இல் கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
திருமதி த. குணரத்தினம்.
[மகள்]

கல்வளை,
சண்டிலிப்பாய். [18289]

### நடராஜா சண்முகநாதன்

கண்ணாடி மாமா என்று அன்பாக அழைக்கப்படும் நடராஜா சண்முகநாதன் 28 - 9 - 91 [சனிக்கிழமை] கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தந்தையா நடராஜா - நடராஜா பாக்கியம் அவர்களின் இரண்டாவது புத்திரனும், சாந்திமலரின் அன்புக் கணவரும், சபேசன், வ கீசன் [சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள்], கம்சப்பிரியா ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை [2-10-91] காலை 10.00 மணியளவில் பாண்டியன் தாழ்விலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

227, கொழும்புத்துறை வீதி, மனைவி, பிள்ளைகள்
பாண்டியன்தாழ்வு. [17950]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நெருக்குதல் தேவை

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு. புனரமைப்புத் திட்டங்களை நெறிப்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் மாநாடு ஒன்று நடைபெற இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட, வடக்கு-கிழக்கிலேயே. புனர்வாழ்வும். புனரமைப்பும் மிகப் பெரிய அளவில் தேவைப்படுகின்றன. கடந்த பத்து வருடங்களாக இப்பிரதேசங்கள் தொடர்ச்சியாக இராணுவ நடவடிக்கைகளுக்கு உட்பட்டு வருகின்றன. அதனால் மக்களுக்கும். உடைமைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகள் அனந்தம்.

வசதியுடன் வாழ்ந்த மக்கள் கூட, ஒரு சில நிமிட நேரத்தில் திக்கற்றவர்களாகவும்,உழைப்பில்லாதவர்களாகவும் மாறுகின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் தமது குடும்பத்தலைவர்களை இழந்து உணவுக்கு வழியில்லாதவர்கள் ஆகிறார்கள். இன்னும் பெரும் எண்ணிக்கையானோர் இராணுவத் தாக்குதல்களால் ஊனமுற்று அங்கவீனர்கள் ஆகிறார்கள்.

இவர்கள் எல்லோருக்கும் புனர்வாழ்வு தேவை. அது கட்டாயமானது.

தமிழ்ப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான மக்களின் வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் கிழக்கில் பல தமிழ்க்கிராமங்கள் அடையாளமே தெரியாமல் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

அதே போல மக்கள் சேவைகளோடு சம்பந்தப்பட்ட பல அரசாங்கச் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டுவிட்டன.

இவை யாவும் புனரமைப்பு-புனர்நிர்மாணம்—செய்யப்பட வேண்டும். தமிழ்ப் பிரதேசங்கள் பல புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவை உண்டு.

பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வும், சேதமடைந்த சொத்துகளின் புனர்நிர்மாணமும் திட்டமிட்டுச் செய்யப்பட வேண்டியவை. எழுந்தமானத்தில் குறுகிய கால திட்டங்கள் வகுக்கப்படக் கூடாது. எதிர்கால நலனை மையமாக வைத்து, பல கோணங்களிலும் வைத்து ஆராய்ந்து, அனுகி, சாதக, பாதகங்களை எடைபோட்டு, நீண்ட காலத் திட்டங்கள் உருவாக்கப்படுவது அவசியம்.

நொந்து போனவர்களுக்கும், நொடிந்து போனவர்களுக்கும் புதுவாழ்வு அளித்து சமூக மறுமலர்ச்சியை உண்டாக்கும் விதத்தில் புனர்வாழ்வுத் திட்டங்கள் அமைய வேண்டும். தாங்கள் பாதிப்படைந்தவர்கள் என்பதை மறந்து மற்றவர்களுக்கு நிகரான வாழ்க்கை நடத்துவதற்கு உதவுவனவாக உத்தேச திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்துக்கென வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதிகளை அவற்றுக்குப் பயன்படுத்துவதில்லை. புனர்வாழ்வு, புனர் நிர்மாணத் திட்டங்களை நடைமுறைப் படுத்தக்கூடிய அமைதிச் சூழ்நிலை ஏற்படவில்லை என்று கூறி அவை வேறு பகுதிகளுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

எனவே மாநாடு கூட்டித் திட்டங்கள் தீட்டுவதற்கு முன்பதாக வேண்டிய நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயற்சிசெய்ய வேண்டும். அரசுக்கு அது சம்பந்தமாகத் துணிந்து நெருக்குதல் கொடுக்கவேண்டும். செய்வார்களா?

# ஜே. வி. பி. இயக்கம் மீண்டும் வெளிச்சத்துக்கு வருமாம்!

கொழும்பு, அக். 1

ஜாதிக விமுக்தி பெரமுன (ஜே. வி. பி) மீண்டும் எழுச்சி பெற்று மக்களுக்காகப் போராடுவதற்கு வெளிச்சத்துக்கு வரும். அதனை எவராலும் அழித்துவிட முடியாது. அதன் அரசியல் சக்தி அசைக்க முடியாதது.

—இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜே. வி. பியின் தலைவர் திரு. சோமவன்ச அமரசிங்கா.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:- "1971 ஆம் ஆண்டிலும் ஜே. வி. பி, ஒழிக்கப்பட்டுவிட்டதாக ஒரு கருத்துப் பரப்பப்பட்டது ஆனால் அது மீண்டும் எழுந்து வந்ததை மக்கள் பார்த்தார்கள்.

ஸ்ரீலங்காவின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் ஜே. வி. பியும் ஒரு வல்லமையுள்ள அரசியல் கட்சியாக விளங்கியது. அரசாங்கம் எங்கள் கட்சியை பயங்கரவாதம் மூலம் ஒடுக்க முயன்றதாலேயே நாம் எமது வழியை மாற்ற வேண்டியதாயிற்று.

எமது கட்சி தனது சுயபாதுகாப்புக் கருதியே அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தியது.

நாங்கள் மக்களுக்கு மட்டுமே பொறுப்பு, அந்தப் பொறுப்பிலிருந்து தவறினால், சுய ஆய்வின் மூலம் நாம் அதனைத் திருத்திக் கொள்வோம்— என்றார். (அ)

# காப்புறுதி வசதி இல்லை; வங்கிகளுக்குக் கஷ்டம்

யாழ்ப்பாணம், அக். 1

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்க வங்கிகள் பணத்தை இருப்பு வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றுக்கான காப்புறுதி வசதி கடந்த வருடம் ஜூன் மாதத்தில் இருந்து நிறுத்தப்பட்டதே இதற்கான காரணம் ஆகும்.

இதன் காரணமாக மக்கள் வங்கி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவ்வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்து வரும் பணத்தை, காப்புறுதி வசதி இல்லாததால் அங்கிருந்து வங்கி அலுவலகத்திற்குக் கொண்டுவர முடியாதுள்ளது. அதனால் கப்பலில் வைத்தே திணைக்களக் காசோலைகளுக்குப் பணத்தை வழங்கவேண்டியதாயிற்று.

இப்போது திணைக்களங்கள் காசோலைகள் மாற்றுவதைக் குறைத்துவிட்டன. அதனால் கப்பல் மூலம் குறைந்தளவு பணமே எடுத்துவரப்படுகிறது. பெருந்தொகைப் பணத்தை அனுப்புவதற்கு, கொழும்புத் தலைமை அலுவலகம் இணங்கிய போதிலும் காப்புறுதி வசதி இல்லாததால் பணத்தைக் கொண்டு வர முடியவில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டது. [உ-8]

### யாழ். பல்கலைக்கழகத்தில்

# வெளிவாரிப் பட்டப்படிப்பு: பதிவு திகதி 12 வரை நீடிப்பு

யாழ்ப்பாணம், அக். 1

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கலை, வர்த்தகம் ஆகிய வெளிவாரிப் பட்டப் படிப்புத்துறைகளுக்கு விஞ்ஞானத்துறை சார்ந்த மாணவர்களும் பதிவு செய்து பயில்வதற்கு வசதிசெய்யப்பட்டுள்ளது.

விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் சித்தியடைந்தவர்கள் கலை அல்லது வர்த்தகத் துறைக்கும் பதிவுசெய்து பட்டதாரிகளாக வரமுடியும்.

அத்துடன் சங்கீதரத்தினம், பண்டிதர் ஆகிய தராதரமுடையோரும் இந்தத் துறைகளுக்குப் பதிவுசெய்து பயில்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கலை, வர்த்தகத் துறைகளுக்குப் பதிவு செய்வதற்கான கடைசி தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு மீண்டும் இலங்கை வங்கிக் கடன்

யாழ்ப்பாணம், அக். 1

விவசாயிகளுக்கு குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் உதவித் திட்டத்தை இலங்கை வங்கி மீண்டும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிக்க உள்ளது.

இத்தகவலை இலங்கை வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளர், அரசாங்க அதிபருக்கு அறிவித்திருக்கிறார்.

விவசாய நடவடிக்கைகளுக்கு உதவு முகமாக வழங்கப்பட்டு வந்த இந்தக் கடனுதவித் திட்டம், கடந்த ஆண்டு இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் இந்த உதவித் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து பிரதம மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

பிரஸ்தாப கடனுதவித் திட்டத்தை உடனடியாகத் தொடக்குமாறு இலங்கை வங்கி யாழ். பிராந்திய முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (அ-5)

# வவுனியா போக்குவரத்து தடையின்றி நடக்கிறது

வவுனியா ஊடான போக்குவரத்துக்கள் எதுவித தடங்கலும் இன்றி வழமைபோல் நடந்து வருகின்றன.

நேற்று ஏராளமானோர் தாண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். அதேபோல் இங்கிருந்து புறப்பட்ட பலரும் வவுனியாவைச் சென்றடைந்தனர்.

வவுனியா— தாண்டிக்குளம் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

இந்தப் பகுதியூடாக வாகனப் போக்குவரத்தும் வழமைபோல் நடந்துவருகிறது.

ஏராளமான சைக்கிள் வியாபாரிகளும் நேற்று [illegible] [illegible]

# தமிழ் நாட்டில் பொலீஸ் சுட்டு ஒரு மீனவர் பலி; 9 பேர் காயம்

சென்னை, அக். 1

வன்முறையிலீடுபட்ட 3000 பேர் கொண்ட மீனவர் கும்பல் ஒன்றைக் கலைக்க தமிழ்நாடு பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருமீனவர் கொல்லப்பட்டார். 9 மீனவர்கள் காயம் அடைந்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம் குழைச்சல் என்ற இடத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

தமது பகுதியில் அதிக பேருந்து நிலையங்கள் வேண்டும் என்று மீனவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்றும் —

இதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போது அவர்கள் ஒன்று திரண்டு பல இடங்களில் கற்களால் தாக்கினர் என்றும் -

இறுதியிலேயே காவல்துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் மாநில சட்ட - ஒழுங்குப் பிரிவுத் தலைவர் வால்டர் தேவாரம் தெரிவித்தார். [இ-த]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 1

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விளையாட்டுக் குழுவின் கலந்துரையாடல் நாளை காலை 10-30 மணியளவில் கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற இருக்கின்றது.

விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்கள் மற்றும் விளையாட்டுக் குழுவின் செயற்குழுவினர் ஆகியோருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருக்கிறது.

## பாலையடிவெட்டையிலும் புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக்: 1

மட்டக்களப்பு மாவட்டம் பாலையடிவெட்டை முகாமில் இருந்து வெளியேறி ரோந்து சென்ற படையினர் மீதும் விடுதலைப் புலிகள் நேற்று திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

சேத விவரங்கள் குறித்து தகவல் கிடைக்கவில்லை.

# மன்னாருக்கு மீண்டும் தொலைபேசி வசதி!

ஒரு வருட இடைவெளிக்குப் பின்னர் மன்னாரிலிருந்து பிறமாவட்டங்களுக்கு தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களுடன் அரச திணைக்கள அதிகாரிகள் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சேவை விஸ்தரிக்கப்பட்டு தனியாருக்கும் விரைவில் தொலைபேசி வசதி கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

மன்னார் செயலகப் பாவனைக்காக "ஆட்டோ" ஒன்று கப்பல் மூலம் மன்னாருக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (உ-3)

## படிவங்கள் முடிந்து விட்டன

நவாலி, அக். 1

யாழ். பிறப்பு-இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் 1954 ஆம் ஆண்டின் பின்பிறந்தவர்களுக்கு வழங்கப்படும் இரு பகுப் படிவங்கள் முடிவடைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து இப் படிவங்கள் வந்து சேர்ந்தாலேயே இனி விண்ணப்பிப்பவர்களுக்கு அவற்றை வழங்க முடியுமென்று மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்துள்ளார். [த-100]

# கொள்கலனுடன் வந்தோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வதற்காக பிளாஸ்டிக் கொள்கலன்களுடன் வவுனியா வந்த பலர் ஏமாற்றம் அடைந்தசம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இவர்கள் கொண்டு வந்தகொள்கலன்களும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

வழமையாக வெள்ளிக்கிழமைகளிலேயே வட பகுதிக்கு மண்ணெண்ணெய் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தது.

இந்த நடைமுறையை படையினர் திடீரென சனிக்கிழமையாக மாற்றி இருந்தனர்.

இதனை அறியாது பிளாஸ்டிக் கொள்கலன்களுடன் வந்தவர்களே, கொள்கலன்களையும் படையினரிடம் பறி கொடுத்த நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வழமைபோல் ஒருவர் 5 லீற்றர் மண்ணெண்ணெய்யையும், 2 கிலோ நிறை உள்ள உணவுப் பொருள்களையும் மட்டுமே எடுத்துச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## முல்லையிலிருந்து இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களுக்கு

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களினதும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பயிற்சி ஆசிரியர்களினதும் 1988-1989 வரையான காலப் பகுதிக்குரிய லீவு விவரங்கள் யாழ். கல்வித்திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன.

சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக மேற்படி லீவு விவரங்கள் சேகரிக்கப்பட்டு, இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், விவரங்கள் தேவைப்படும் மேற்படி ஆசிரியர்கள் யாழ். கல்வி அலுவலக ஆசிரிய நிர்வாகக் கிளையில் தத்தமது விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (த-5)

## செயலக சாரதிகள் இடமாற்றம்

யாழ். செயலகத்தில் பணிபுரிந்த வாகன சாரதிகள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச திணைக்களங்களில் வாகனங்கள் பாவனையில் இல்லாததால் சாரதிகள் பலர் தென் பகுதிக்கு மாற்றப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபரின் முயற்சியால் செயலக சாரதிகள் 10 பேர் உ. அ. அ. அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (த-100)

### வேதாரணியம் பகுதியில் நடந்த

# தேடுதலில் 34 பேர் கைது! வெடி பொருள்கள் மீட்பு!!

## தமிழக அரசு அறிவிப்பு

தமிழகத்தில் வேதாரண்யம் முதல் கோடியக்கரை வரையான கடற்கரைப் பிரதேசத்தில் ஆயுதப் பொலீஸார் நடத்தி வரும் தேடுதல் நடவடிக்கையின் போது. இது வரை 34 பேர் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

புதைக்கப்பட்டிருந்த 500 கிலோ வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டன.

தகுந்த பயண ஆவணங்கள் இன்றி காணப்பட்ட எட்டு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் புதைத்து வைத்திருக்கக் கூடும் என்று நம்பப்படும் ஆயுதங்கள், வெடிப் பொருள்கள் மற்றும் கடத்தல் பொருள்களை மீட்கவே இத்தேடுதல் நடத்தப்பட்டது. (இ-எ)

### பிலிப்பீன்ஸ் நாட்டுக்குள்

# மார்க்கோஸின் சடலத்தை கொண்டுவர முடியாது!

## மணிலாவில் அதிகாரிகள் அறிவிப்பு

பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதியான பெர்டினன்ட் மார்க்கோஸின் சடலத்துடன் அவரின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் பிலிப்பீன்ஸ் திரும்ப முயற்சித்தால் அதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று மணிலாவில் அரசின் உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அரசின் தடையையும் மீறி மார்க்கோஸின் சடலத்தை இமெல்டா கொண்டுவந்தால் அது கள்ளக்கடத்தலாகக் கணக்கிடப்படும் என்றும் அவர் சொன்னார்.

தமது கணவர் பெர்டினன்டின் சடலத்துடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மணிலா திரும்பப் போவதாக இமெல்டா மார்க்கோஸ் அறிவித்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

இமெல்டா மார்க்கோஸ் தற்போது அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தங்கி உள்ளார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புச் சபைக்கு மேலும் 3 நிரந்தர நாடுகள்

## கொமன்வெல்த் கோருகிறது

புதுடில்லி, அக். 1

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக இந்தியா, ஜேர்மன், ஜப்பான் ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கொமன்வெல்த் நாடாளுமன்ற அமைப்பு கோரியுள்ளது.

புதுடில்லியில் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த அந்த அமைப்பின் 40 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளாக அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன உள்ளன.

பதினைந்து நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த பாதுகாப்புச் சபையில் ஏனைய உறுப்பு நாடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு அங்கம் வகிக்கும் விதத்தில் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றன. (இ-எ)

## ஓய்வூதிய வவுச்சர்கள் வந்தன

யாழ்ப்பாணம், அக். 1

கடந்த வெள்ளியன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த கப்பலில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கான ஆகஸ்ட், செப்டெம்பர் மாத ஓய்வூதிய ''வவுச்சர்கள்'' எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தில் ''வவுச்சர்கள்'' பரிசீலிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்ட பின்னர் இன்னும் சில தினங்களில் அவை உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவுகளே முதலில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## மகனை கொன்று தின்ற ஆதிவாசி

பீகார், அக். 1

தனது சொந்த மகனையே வெட்டிக் கொன்று தின்ற ஆதிவாசி ஒருவரை பீகார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மயாலு மர்மு என்ற இந்த ஆதிவாசி பச்சைக் குழந்தைகளைக் கடத்திச் சென்று கொன்று தின்று வந்தார் என்றும், மாயமந்திரம் கற்றுக்கொள்ளவே தான் அப்படிச் செய்ததாக அவர் தனது வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த]


### யாழ். இந்து ஆரம்ப பாடசாலை குழந்தைச் சமூகத்தின் சிற்பிகளை போற்றுகிறோம்

உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் ''சமூகத்தை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள்'' என்ற கட்டமைப்பில் மனித சமுதாயத்தின் முதற் கூறான குழந்தைப் பருவத்தை உருவாக்கும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை சிற்பிகளையும், உலக ஆசிரிய சமூகத்தையும் பெற்றோர்கள், மாணவர்கள் சார்பில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போற்றுகிறது.

செயலர்
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழுவினர் சார்பில்

(17948)


## விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், அக். 1

கொழும்பில் இருந்து கூடுதல் பொருட்கள் வடக்கே வரத் தொடங்கியதை அடுத்து சில பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளன.

சவர்க்காரம் 45 ரூபாவாகவும், தேங்காய் எண்ணெய் போத்தல் 45 ரூபாவாகவும் நேற்று விற்பனையாகின. முன்னர் விலை அதிகரித்துக் காணப்பட்ட பல பொருள்கள் வீதிகள் தோறும் தாராளமாகக் காட்சியளிக்கின்றன: [உ-3]

## மேற்கிந்திய கிரிக்கெட் கப்டன் ரிச்சர்ட்ஸன்

லண்டன், அக். 1

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் கப்டனாக ரிச்சி ரிச்சர்ட்ஸன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உலக கிரிக்கெட் இன்னிங் போட்டிகளில் மேற்கிந்திய அணிக்கு 29 வயதான ரிச்சர்ட்ஸனே தலைமை வகிப்பார் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## பாதுகாப்புச்சபை தலைமைப் பதவி இந்தியாவுக்கு

ஐ நா., அக். 1

ஐ. நா. பாதுகாப்புச்சபையின் தலைமைப் பதவியை இம்மாதம் இந்தியா வகிக்க இருக்கிறது.

பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளிடையே மாதம் ஒரு தடவை தலைமைப் பதவி பகிர்ந்து கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## ஆட் கடத்தல்: பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு

காஷ்மீரிகள் போன்று வேஷம் போட்ட பாகிஸ்தானிய இராணுவத்தினரே காஷ்மீர் மாநிலத்தில் ஆட்களைக் கடத்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்று இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம் .ஜேக்கப் தெரிவித்தார்.

கடத்தல் நடவடிக்கைகளில் காஷ்மீரிகள் ஈடுபடுவதில்லை என்றும் இணை அமைச்சர் கூறினார்.

# ஜொனி மிதி வெடியில் சிக்கி பல படையினர் கால் இழப்பு!

## மணலாறு சண்டை குறித்து செய்தியாளர் தகவல்

கொழும்பு, அக். 1

மணலாறு யுத்தத்தின் போது இராணுவத்தினர் பலர் ''ஜொனி'' மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்தனர். அதிலிருந்து அதிர்ஷ்டமாகத் தப்பியவர்கள் மரங்களுக்குப் பின்னால் மறைந்து நின்று சுடமுயன்றபோது அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்ணிவெடிக்குத் தமது கைகளை இழந்தனர்.

இத்தகவலை மணலாறு யுத்தமுனைக்கு நேரில் சென்று தகவல் திரட்டிய ''ஐலண்ட்'' பத்திரிகையாளர் தமது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

மணலாறுப் பகுதியில் தங்கள் முகாம்களைச் சுற்றிவர விடுதலைப் புலிகள் தாம் உற்பத்தி செய்த ''ஜொனி'' மிதிவெடிகளை பெரும் எண்ணிக்கையில் விதைத்திருந்தனர். மிதிவெடிகளில் மூளையைத் தாக்கக்கூடிய ஒருவித இரசாயனப் பொருளையும் அவர்கள் சேர்த்திருந்தனர் — என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காட்டுப்பகுதியில் நடந்த மிகப் பெரிய சண்டையான மணலாறு யுத்தத்தில் படையினர் மண்மூடைகளைத் தமக்கு முன்னே தள்ளிக்கொண்டு அங்குலம் அங்குலமாகவே முன்னேற முடிந்ததாக மேஜர் பொனிபாஸ் பொரரா தெரிவித்தார்.

கடும் விமானத்தாக்குதல்கள், கடல் வழித் தடுப்பு என்பனவற்றின் உதவி இருந்தும் புலிகள் கொடுத்த எதிர்ப்பினால் படைகளால் வேகமாக முன்னேற முடியவில்லை.

படையினர் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் செல்வதற்கு ஒற்றையடிப் பாதைகளை வெட்டித் துப்புரவு செய்தே போக முடிந்தது.

இராணுவம் தனது தாக்குதல் மற்றும் தற்காப்பு முறைகளை மாற்றியாக வேண்டும் என்பதை மணலாறு யுத்தம் புகட்டியிருக்கிறது.

யுத்தம் நடந்த பகுதியில் துப்பாக்கிரவைகளும் மற்றும் குண்டுகள், ஷெல்லுகளின் சிதறு துண்டுகளும் துளைக்காத ஒரு மரத்தைக் கூடப் பார்ப்பது அரிது!

இதுவரை நடந்த யுத்தங்களில் மணலாறிலேயே மிகப் பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் ''ஜொனி''யில் அகப்பட்டு தமது கால்களை இழந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைத்திருந்த முகாம்களையும், பங்கர்களையும் விமானத்தில் இருந்து பார்த்துக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவை பலத்த பாதுகாப்பு வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

அவற்றின் மேலும், சுற்றவரவும் காடுகள் வளர்ந்திருந்ததால் குண்டு வீச்சினால் கூட தகர்க்கமுடியாமற்போயிற்று.

''சுகந்தர்'' என்ற முகாமில் அவர்கள் நிலஅறை உருவாக்கி பெரும் ஆயுதத் தொழிற்சாலை ஒன்றை அமைத்திருந்தனர். மைக்கேல் முகாமிலும் 75 மீற்றர் நீளமும், 25 அடி ஆழமும் உள்ள ஒரு கிடங்கை வெட்டி ஒரு ஆயுதத் தொழிற்சாலை கட்டியிருந்தனர். அது மட்டுமா? அழகாகவும், சித்திரமாகவும் நிர்மாணிக்கப்பட்ட மைக்கேலின் உருவச்சிலையும் அங்கு எழிலாகக்காட்சியளித்தது.— இவ்வாறு கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது. [அ]

## ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை இரண்டும் ஒரே நேரத்தில்!

கொழும்பு, அக். 1

வடக்கில் 1990 ஆம் ஆண்டுக்கான ஜி சீ. ஈ சாதாரண தர விசேட பரீட்சையும், 1991 ஆம் ஆண்டுக்கான பரீட்சையும் எதிர்வரும் டிசம்பரில் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடுகள் செய்து வருகிறது.

கொழும்பு சென்று திரும்பிய யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்களைத் தயாரிக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## இடைநிறுத்தம்

கொழும்பு, அக். 1

திரு. சம்வி குணவர்த்தனா ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் உப தலைவர் பதவியில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய லெஸ்லி குணவர்த்தனாவின் சகோதரரான சம்வி குணவர்த்தனா, சமீபத்தில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையை ஆதரித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில், இவர் மீதான இடைநிறுத்தத்தை வாபஸ் பெறும்படி களுத்துறை மாவட்ட ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்கிளை, கட்சியின் தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளது. (இ-10)

## ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 1

வேட்டைக்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கி சரிந்து விழுந்ததினால் வெடித்தது; அதனால் ஒருவர் காயமடைந்தார்.

எழுதுமட்டுவாள், இடைவிலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் இடைவிலைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை ஜெயரட்ணம் (வயது 39) என்பவராவார். [த-15]


## இன்றைய சேமிப்பு—நாளைய சந்ததியின் பாதுகாப்பு

## இன்றே ஷப்றாவுடன் இணைந்து சேமியுங்கள்!

## நிதித்துறையில் உங்கள் நண்பன்

# ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

2, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு - 4
தொலைபேசி: 508087-90


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் ... 393/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org